வணக்கம்

ஆகாஷ்வாணி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 8.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவிற்கு 3 நாள் அரசு முறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றுள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி குகைகளை இன்று பார்வையிட்டார்.

மாநிலங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தி பெண் ஊழியர்களுக்கான மாதவிடாய் விடுப்பு வழங்குவது குறித்த மாதிரிக் கொள்கையை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் இடைத் தேர்தல் நடைபெறுவதை ஒட்டி தேர்தல் பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவிற்கு 3 நாள் அரசு முறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றுள்ளார். ரஷ்யா புறப்படும் முன் பிரதமர் திரு மோடி சமூக ஊடகத்தில் இந்த பயணமானது ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா உடனான உறவை வலுப்படுத்துவதற்கான அற்புதமான வாய்ப்பாக இருக்கும் என்று பதிவிட்டுள்ளார். மேலும் இந்த நாடுகளில் வாழும் இந்தியர்களுடன் கலந்துரையாடும் நிகழ்வை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இன்றும் நாளையும் நடைபெறும் 22-ஆவது வருடாந்திர உச்சி மாநாட்டில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடினுடன் பங்கேற்க உள்ளதை சுட்டிக்காட்டி உள்ள பிரதமர் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு அனைத்து நிலைகளிலும் முன்னெடுத்து செல்லப்படும் என குறிப்பிட்டுள்ளார். எரிசக்தி, பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, சுகாதாரம், கல்வி, கலாச்சாரம், சுற்றுலா உள்ளிட்ட பிரிவுகளில் இந்தியா ரஷ்யா இடையேயான ஒத்துழைப்பின் முக்கியத் துவம் குறித்து தெரிவித்துள்ள பிரதமர் கடந்த 10 ஆண்டுகளில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு பல துறைகளில் சிறப்பாக முன்னேறி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்த பயணத்தின் போது தனது நண்பர் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடினை சந்தித்து உரையாட

உள்ளதாகவும் அப்பொழுது இருதரப்பு ஒத்துழைப்பின் அனைத்து அம்சங்களையும் மறு ஆய்வு செய்வதற்கும் உலகளாவிய பிரச்சனைகள் தொடர்பாக பகிர்ந்து கொள்வது குறித்தும் தாம் ஆவலுடன் இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். க்ரம்பிளின் வளாகத்தில் உள்ள போர் வீரர்களின் நினைவிடத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி மரியாதை செலுத்த உள்ளார். மேலும் மாஷ்கோவில் உள்ள கண்காட்சி கூடத்தையும் அவர் பார்வையிடுகிறார். ஆஸ்திரிய பயணம் குறித்து பிரதமர் குறிப்பிடுகையில் இந்தியாவின் சிறந்த வலுவான நட்புறவு நாடாக ஆஸ்திரியா திகழ்கிறது என்றும் ஜனநாயகம் மற்றும் பன்முகத் தன்மையை பாதுகாப்பதில் இருநாடுகளின் பங்களிப்பு குறித்தும் தெரிவித்துள்ளார். ஆஸ்திரிய அதிபர் அலெக்சாண்டர் வேண்டர் பெலன் மற்றும் அந்நாட்டின் தலைவர் திரு கார்ல் நெஹமரை தாம் சந்தித்துப் பேச இருப்பது குறித்தும் தெரிவித்துள்ள பிரதமர் இருநாடுகளுக்கு இடையிலான படைப்பாற்றல் திறன், தொழில் நுட்பம், நீடித்த வளர்ச்சி உள்ளிட்டவற்றை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான தமது பயணம் குறித்தும் பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். 41 ஆண்டுகளுக்கு பின் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரிய பயணம் மேற்கொள்வது குறித்து தாம் ஆவலுடன் இருப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக வலைதளப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

முர்மு

ஒடிசா மாநிலத்திற்கு 4 நாள் பயணமாக சென்றுள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புவனேஸ்வரில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி குகைகளை இன்று பார்வையிட்டார். பிராமி எழுத்துக்களில் செதுக்கப்பட்ட உதயகிரி குகைகள் ஹாதிகும்பா கல்வெட்டுக்கு பிரபலமானதாக உள்ளது. ஒடிசாவின் வரலாற்றுகால பெயரான கலிங்கத்தின் பெரிய மன்னராக திகழ்ந்த காரவேலா நிகழ்த்திய பல்வேறு படையெடுப்புகளை இக்கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இந்த பயணத்தின் போது குடியரசு தலைவர் பிபூதி கனுங்கோ கலை மற்றும் கைவினை கல்லூரி மாணவர்களுடனும், உத்கல் கலாச்சார பல்கலைக் கழக மாணவர்களுடனும் கலந்துரையாட உள்ளார். மேலும் புவனேஸ்வருக்கு அருகே உள்ள ஹரிடமடா கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மகுமாரிகளின் தெய்வீக ஓய்வுமையத்தையும் திறந்து வைக்கும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நிலைத் தன்மைக்கான வாழ்க்கை முறை குறித்த பிரச்சாரத்தையும் தொடக்கி வைக்கிறார். முன்னதாக புனித நகரமான பூரியில் ஜகந்நாதர், பலபத்ரா, தேவி சுபத்ரா மற்றும், சுதர்சன் ஆகியோரின் உலக புகழ்பெற்ற ரத யாத்திரையை நேற்று அவர் பார்வையிட்டார்.

உச்சநீதிமன்றம்

மாநிலங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தி பெண் ஊழியர்களுக்கான மாதவிடாய் விடுப்பு வழங்குவது குறித்த மாதிரிக் கொள்கையை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான பொது நல வழக்கு தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட், நீதிபதிகள் ஜே பி பர்திவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை தள்ளுபடி செய்த நீதிபதிகள் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இதுதொடர்பான கொள்கையை வகுக்க மாநிலங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்துமாறு உத்தரவிட்டனர். இது அரசின் கொள்கை தொடர்பான பிரச்சனை என்றும் நீதிமன்றங்கள் கவனிக்க வேண்டிய பிரச்சனை அல்ல என்றும் தெரிவித்தனர். பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு வழங்குவது குறித்த நீதிமன்றத்தின் முடிவு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் தொழில் நிறுவன முதலாளிகள் பெண்களை வேலைக்கு அமர்த்துவதை தவிர்க்கும் வாய்ப்பும் ஏற்படலாம் என்றும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

*ராகுல்காந்தி*

மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி ஒருநாள் பயணமாக இன்று மணிப்பூர் சென்றுள்ளார். மணிப்பூரில் ஜிரிபாம்

மாவட்டத்திற்கு சென்ற அவர் அங்கு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வன்முறையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அதைத் தொடர்ந்து இம்பால், சுரசம்பூர், பிஷ்ணுபூர் மாவட்டங்களுக்கும் சென்று அங்கு நிவாரண முகாம்களில் தங்கி உள்ள மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார். இன்று மாலை மணிப்பூரின் ஆளுநர் திருமதி அனுசுயா யுகே-யை சந்தித்துப் பேசுகிறார்.

*உச்சநீதிமன்றம்-நீட்*

இளநிலை மருத்துவ நீட் நுழைவுத் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி புதிய தேர்வு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட 38 மனுக்களை உச்சநீதிமன்றம் இன்று பிற்பகலில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. தலைமை நீதிபதி டிஒய் சந்திரசூட் தலைமையிலான அமர்வில் நடைபெற்ற இந்த விசாரணையின் போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வினாத் தாள் கசிவு, ஓஎம்ஆர் ஷீட் முறைகேடு, ஆள் மாறாட்டம் போன்ற காரணங்களுக்காக தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். அதற்கு பதில் அளித்த நீதிமன்றம் தேர்வை ரத்து செய்வது என்பது இறுதி முயற்சியாக இருக்கும் என்று தெரிவித்தது. தேர்வின் புனித தன்மை என்பது கேள்விக்கு

அப்பாற்பட்டது என்று தெரிவித்த தலைமை நீதிபதி மறுதேர்வுக்கு உத்தரவிடும் முன்பு வினாத் தாள் கசிவு குறித்த அனைத்து விவரங்களையும் அறிய வேண்டியது அவசியம் என்றார். வினாத்தாள் குறித்த விவரங்களை தாக்கல் செய்யவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் பெரிய அளவிலான முறைகேடுகளுக்கு எந்த ஆதாரமும் இல்லாததால் மருத்துவ தேர்வை மீண்டும் நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. புதிய தேர்வானது உண்மையாக தேர்வு எழுதிய லட்ச கணக்கான மாணவர்களின் வாழ்க்கையை பாதிக்கும் என்றும் தேசிய தேர்வு முகமைக்கான சார்பில் தெரிவிக்கப்பட்டது.

விக்கிரவாண்டி

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி உட்பட பஞ்சாப், மத்திய பிரதேசம், பீகார், உத்தரகாண்ட், இமாச்சல பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய 7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நாளை மறுநாள் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை ஒட்டி, இன்று மாலை 6 மணியுடன் பிரச்சாரம் நிறைவடைந்தது. விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக உறுப்பினர் புகழேந்தி உடல் நலக் குறைவால் காலமானதைத் தொடர்ந்து அங்கு

இடைத் தேர்தல் நடைபெறுகிறது. அத்தொகுதியில் திமுக சார்பில் திரு அன்னியூர் சிவா, பாமக, பிஜேபி கூட்டணி சார்பில் திரு அன்புமணி, நாம் தமிழர் கட்சியின் சார்பில் போட்டியிடும் டாக்டர் அபிநயா உட்பட 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். நாளை மறுநாள் நடைபெறும் இடைத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 13-ஆம் தேதி எண்ணப்படுகிறது.

ஹேமந்த் சோரன்

ஜார்கண்ட் சட்டப்பேரவையில் இன்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் திரு ஹேமந்த் சோரன் அரசு வெற்றி பெற்றுள்ளது. ஜார்கண்ட் முக்தி மோர்சா தலைமையிலான கூட்டணி எம்எல்ஏக்கள் 45 பேர் நம்பிக்கை தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஜார்கண்ட் சட்டப் பேரவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 81. இதில் 5 உறுப்பினர் பதவி காலியாக உள்ளது. முன்னதாக ஜார்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் சட்டமன்றத்தில் நம்பிக்கை தீர்மானத்தை கொண்டு வந்தார். அதன் மீது இன்று விவாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் போது எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டு சோரன் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு பின்னர் சபை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. 48 வயதான திரு

ஹேமந்த் சோரன் நில மோசடி தொடர்பான வழக்கில் ஜாமீன் வழங்கப்பட்ட ஒருவாரத்திற்குள் கடந்த 4-ஆம் தேதி மீண்டும் ஜார்கண்ட் முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார்.

*அமர்நாத் யாத்திரை*

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்காக ஜம்மு-காஷ்மீர் சுகாதாரத் துறை குதிரை ஆம்புலன்ஸ் சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. உடல்நலக் குறைவால் பாதிக்கப்படும் யாத்திரிகர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில் தேவையான மருத்துவ உபகரணங்கள், ஆக்சிஜன் சிலிண்டர்கள் போன்றவற்றை விரைவாக எடுத்துச் செல்லும் வகையில் இந்த குதிரை ஆம்புலன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுவதாக ஜம்மு-காஷ்மீர் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் முஸ்தா அகமது ராத்தர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு தடையின்றி செல்போன் இணைப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தொலைதொடர்பு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*கிரிக்கெட்*

இந்திய ஜிம்பாவே அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் 3-ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி, வரும் 10-ஆம் தேதி ஹராரேயில்

நடைபெற உள்ளது. இளம் வீரர்களைக் கொண்ட இந்திய கிரிக்கெட் அணி ஜிம்பாவேயில் தற்பொழுது சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்றும் நாளையும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு, தென்கிழக்கு மற்றும் மத்திய வங்ககடல் பகுதிகளில் இன்றும் நாளையும் மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவிற்கு 3 நாள் அரசு முறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றுள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி குகைகளை இன்று பார்வையிட்டார்.

மாநிலங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தி பெண் ஊழியர்களுக்கான மாதவிடாய் விடுப்பு வழங்குவது குறித்த மாதிரிக் கொள்கையை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு நாளை மறுநாள் இடைத் தேர்தல் நடைபெறுவதை ஒட்டி தேர்தல் பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------